வேளாண்மைஉழவர் நலத்துறையின் பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

தமிழக அரசின் 5 துறைகளின் ஆய்வுக்கூட்டம்

அரசின் திட்டப்பணிகளை விரைவாக முடிக்க வேண்டும்

முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, நவ.30

தமிழக அரசின் 5 துறைகளின் ஆய்வு கூட்டத்தில் பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசின் திட்டப்பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வேளாண்மை–உழவர் நலத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய 5 துறைகளின் திட்டப்பணிகள் குறித்த ஆய்வு கூட்டம், சென்னை தலைமை செயலகத்தில் நேற்று நடந்தது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தில் கடந்த 2021ம் ஆண்டு முதல் இப்போது வரை அந்த துறைகளின் சார்பில் வெளியிடப்பட்ட மானியக் கோரிக்கை அறிவிப்புகள், முதலமைச்சரின் அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியை தொடர்ந்து பெருக்குதல், விவசாய மக்களுக்கு தேவையான துறை சார்ந்த திட்டங்களை சிறப்பாகவும் தரமாகவும் வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் நெய்தல் பாரம்பரிய பூங்கா அமைக்கும் பணிகள், ஈரோடு மாவட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மஞ்சள் ஏற்றுமதி மையம் தரம் உயர்த்தும் பணிகள், ரூ.6 கோடி செலவில் தர்மபுரியில் மா மகத்துவ மையம், நெல்லையில் நெல்லி மகத்துவ மையம் அமைக்கும் பணிகள், தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் வாழை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் ரூ.65 கோடியே 30 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் ஆகியவை குறித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

உலக அளவில் போற்றப்படும் தமிழ்ப் படைப்புகளை வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் பணிகள், தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகத்துக்கு மயிலாடுதுறையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கும் பணிகள், சென்னை தண்டையார்பேட்டை காமராஜர் நகரில் உள்ள அரசு அச்சக பணியாளர்களுக்கான குடியிருப்புகளை இடித்துவிட்டு ரூ.34.54 கோடி செலவில் புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இம்மானுவேல் சேகரனாருக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணி.

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் இளையபெருமாளுக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைக்கும் பணி, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

புதிய மீன் இறங்கு தளங்கள்

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்துடன் இணைந்து, சென்னை காசிமேட்டில் உள்ள மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்தும் பணிகள். கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டை ஆகிய கடலோர கிராமங்களில் ரூ.25 கோடி செலவில் கடல் அரிப்பு தடுப்பு சுவர்களுடன் கூடிய புதிய மீன் இறங்கு தளங்கள் அமைக்கும் பணிகள், சென்னை, செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை ஆகிய மாவட்டங்களில் ரூ.50 கோடி செலவில் நவீன மீன்சந்தைகள் அமைக்கும் பணிகள். அம்பத்தூர் பால் பண்ணையில் ரூ.10 கோடி செலவில் நுண்ணுயிரியல் பகுப்பாய்வு ஆய்வுக்கூடம், நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ரூ.50 கோடி செலவில் நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் பால் பண்ணை உள்ளிட்ட பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

மேலும், கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக முடித்திட வேண்டும் என்றும் முதலமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சாமிநாதன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு செயலாளர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேகதாது திட்டத்திற்கு விரைவாக அனுமதி வழங்க கோரி பிரதமர் மோடியை சந்தித்து சித்தராமையா கோரிக்கை

பெங்களூரு, நவ.30

டெல்லியில் பிரதமர் மோடியை முதல்வர் சித்தராமையா நேற்று நேரில் சந்தித்து பேசினார். அப்போது மேகதாது திட்டத்திற்கு விரைவாக அனுமதி வழங்க அவர் கோரிக்கை விடுத்தார்.

கர்நாடக முதல்வர் சித்தராமையா 2 நாட்கள் சுற்றுப்பயணமாக டெல்லி சென்றுள்ளார். இதற்காக அவர் நேற்று முன்தினம் மாலை பெங்களூருவில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு சென்றார். அங்கு கர்நாடக பவனில் அவர் தங்கினார்.

இந்த நிலையில் நேற்று பிரதமர் மோடியை சந்திக்க திடீரென்று திட்டமிட்ட சித்தராமையா பிரதமர் அலுவலகத்தில் நேரம் கேட்டு இருந்தார். பிரதமர் அலுவலகமும், பிரதமர் மோடியை சந்திக்க நேரம் ஒதுக்கியது. இதையடுத்து

சித்தராமையா, பிரதமர் மோடியை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து பேசினார். அப்போது கர்நாடக நீர்ப்பாசனத்துறையை தன் வசம் வைத்துள்ள துணை முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் உடன் இருந்தார்.

மேகதாது அணை கட்ட ஜல்சக்தி துறை அனுமதி வழங்கவும், கலசா பண்டூரி திட்டத்திற்கு சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்கவும் நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் மோடியிடம், சித்தராமையா வலியுறுத்தினார்.

மேலும் பிரதமர் மோடியிடம் சித்தராமையா ஒரு கோரிக்கை கடிதத்தை வழங்கினார். அந்த கடிதத்தில் கூறியுள்ளதாவது:

கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்ட முடிவு செய்துள்ளோம். குடிநீர் நோக்கத்தில் இந்த அணை கட்டப்பட உள்ளது. இதற்கு ஜல்சக்தித்துறை மற்றும் சுற்றுச்சூழல் துறையின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அதே போல் கலசா பண்டூரி கால்வாய் திட்டத்திற்கும் இந்த இரு துறைகளின் அனுமதி கிடைக்க வேண்டும். தாங்கள் இந்த விவகாரத்தில் தலையிட்டு இந்த திட்டங்களுக்கு விரைவாக ஒப்புதல் வழங்கும்படி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

6 முதல் பிளஸ்–2 வகுப்பு வரையிலான வகுப்புகளுக்கு அரையாண்டு தேர்வு அட்டவணை வெளியீடு

சென்னை, நவ.30–

6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வகுப்பு வரையிலான வகுப்புகளுக்கு அரையாண்டு தேர்வு அட்டவணை வெளியாகியுள்ளது.

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கான அரையாண்டு தேர்வு வருகிற 9ந் தேதி முதல் 23ந் தேதி வரை நடைபெற இருப்பதாக ஏற்கனவே பள்ளிக்கல்வித்துறை அறிவித்தது.

இதில் 1 முதல் 5ம் வகுப்புக்கு வருகிற 16ந் தேதி முதல் 23ந் தேதி வரையிலும், 6 முதல் பிளஸ்–2 வகுப்புக்கு 9ந் தேதி முதல் 23ந் தேதி வரையிலும் தேர்வு நடக்கிறது.

தேர்வு தேதி அறிவிக்கப்பட்டபோது, எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்2 வகுப்புகளுக்கு மட்டும் தேர்வுக்கான முழு அட்டவணையையும் பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டு இருந்தது. இதன் தொடர்ச்சியாக தற்போது 6 முதல் 9ம் வகுப்பு வரைக்கும், பிளஸ்1 வகுப்புக்கும் தேர்வுக்கான முழு அட்டவணை வெளியாகி உள்ளது.

அதன்படி, 6 முதல் 9ம் வகுப்பு வரைக்கும் 9ந் தேதி தமிழ், 10ந் தேதி விருப்ப மொழி, 12ந் தேதி ஆங்கிலம், 16ந் தேதி கணிதம், 18ந் தேதி உடற்கல்வி, 20ந் தேதி அறிவியல், 23ந் தேதி சமூக அறிவியல் தேர்வும் நடக்க உள்ளது.

இதில் 6ம் வகுப்புக்கு காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும், 7ம் வகுப்புக்கு பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையிலும், 8ம் வகுப்புக்கு 10 மணி முதல் 12.30 மணி வரையிலும், 9ம் வகுப்புக்கு பிற்பகல் 2 மணி முதல் 4.30 மணி வரையிலும் தேர்வுக்கான நேரம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

எஸ்.எஸ்.எல்.சி.

எஸ்.எஸ்.எல்.சி.க்கு 10ந் தேதி தமிழ், 11ந் தேதி (புதன்கிழமை) விருப்ப மொழி, 12ந் தேதி ஆங்கிலம், 16ந் தேதி கணிதம், 19ந் தேதி (வியாழக்கிழமை) அறிவியல், 23ந் தேதி சமூக அறிவியல் தேர்வும் காலை 9.45 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையிலும் நடைபெற இருக்கிறது.

பிளஸ்1 வகுப்புக்கு 9ந் தேதி தமிழ், 10ந் தேதி ஆங்கிலம், 12ந் தேதி கம்யூனிகேட்டிவ் ஆங்கிலம், கம்ப்யூட்டர் சயின்ஸ், புள்ளியியல் உள்ளிட்ட சில பாடங்களுக்கும், 16ந் தேதி உயிரியல், தாவரவியல், வரலாறு உள்ளிட்ட சில பாடங்களுக்கும், 18ந் தேதி வேதியியல், கணக்கு பதிவியியல், புவியியல், 20ந் தேதி இயற்பியல், பொருளியல், 23ந் தேதி கணிதம், விலங்கியல், வணிகவியல் உள்ளிட்ட சில பாடங்களுக்கும் தேர்வு நடக்கிறது.

பிளஸ்2

பிளஸ்2 வகுப்புக்கு 9ந் தேதி தமிழ், 10ந் தேதி ஆங்கிலம், 12ந் தேதி கம்யூனிகேட்டிவ் ஆங்கிலம், கம்ப்யூட்டர் சயின்ஸ், புள்ளியியல் உள்ளிட்ட சில பாடங்களுக்கும், 16ந் தேதி கணிதம், விலங்கியல், வணிகவியல் உள்ளிட்ட சில பாடங்களுக்கும், 18ந் தேதி உயிரியல், தாவரவியல், வரலாறு உள்ளிட்ட சில பாடங்களுக்கும், 20ந் தேதி வேதியியல், கணக்கு பதிவியியல், புவியியல், 23ந் தேதி இயற்பியல், பொருளியல், வேலைவாய்ப்பு திறன்கள் தேர்வும் நடக்க உள்ளது. இந்த தேர்வுகள் காலை 9.45 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடக்கிறது.

பத்திரிகையாளர்களின் நலன்காக்கும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்

சென்னை, நவ.30

பத்திரிகையாளர்களின் நலன்காக்கும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது என்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மக்களாட்சியின் பாதுகாவலர்களான பத்திரிகையாளர்களின் நலனைக் காப்பதில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. அரசின் பத்தாண்டுகால ஆட்சியில் பத்திரிகைத்துறையினர் மீது போடப்பட்ட பல்வேறு அவதூறு வழக்குகளை ஆட்சிப் பெறுப்பெற்றவுடனேயே ரத்து செய்ய உத்தரவிட்டு கருத்துரிமையைக் காத்து நின்றார் முதலமைச்சர்.

பத்திரிகையாளர்களின் நலனைக் காக்கும் பொருட்டு தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 'பத்திரிகையாளர் நலவாரியம்' உருவாக்கப்பட்டது. இந்த நலவாரியத்தில் 3,300 பேர் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

நலவாரிய உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட 21 வகையான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

அண்ணாதி.மு.க. ஆட்சிக்காலத்தில் பத்திரிகையாளர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்த செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டை வழங்கப்படாமலும், அதற்கான குழுவும் அமைக்கப்படாமலும் இருந்தது. தி.மு.க. அரசு ஆட்சிப் பெறுப்பேற்றவுடன் அதற்கான குழு அமைக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை தமிழ்நாடு முழுவதும் 2,431 செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 446 செய்தியாளர்களுக்கு சுகாதார அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர் நல வாரியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்தியாளர்களுக்கு ஓய்வூதியம், மறைந்த செய்தியாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி போன்ற பத்திரிகையாளர்களின் நலன்காக்கும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அரசை தினந்தோறும் குறை சொல்லிக் கொண்டே இருக்கும் எடப்பாடி பழனிசாமிக்கு ஆர்.எஸ்.பாரதி கடும் கண்டனம்

சென்னை, நவ.30–

அரசை தினந்தோறும் குறை சொல்லிக் கொண்டே இருக்கும் எடப்பாடி பழனிசாமியின் பேச்சை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள் என தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி கூறியள்ளார்.

தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2026 சட்டசபை தேர்தலுக்கு கூட்டணி கிடைக்காமல் அல்லாடும் எடப்பாடி பழனிசாமி, இல்லாததையும் பொல்லாததையும் உளறிக்கொண்டிருக்கிறார்.

திருப்பூர் மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்ட விவகாரத்தில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் உடனடியாக 7 சிறப்பு தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை விரைந்து பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எடப்பாடி பழனிசாமி தனிநபர் குற்றங்களையும் ஆதாய கொலைகளையும் சுட்டிக்காட்டி சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என மீண்டும் மீண்டும் புலம்பிக் கொண்டிருக்கிறார்.

மதுரை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம் எழுதி உள்ளார். மக்கள் எடுக்கும் முடிவுக்கு 100 சதவீதம் தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கும் என தெரிவித்ததை தொடர்ந்து பொதுமக்களின் போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

வழக்கமாக தொலைக்காட்சியில் செய்தி தெரிந்து கொள்ளும் எதிர்க்கட்சித்தலைவர் டி.வி.யை பார்க்காமல் அண்ணா தி.மு.க. சார்பில் போராட்டங்களில் கலந்து கொள்வோம் என அறிவித்துள்ளார்.

வேளாண் பாதுகாப்பு மண்டலமாக டெல்டா மாவட்டங்களை அறிவித்த அண்ணா தி.மு.க. அரசு, சூழலியல் பாதுகாப்புக்கான பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பவே இல்லை என்ற தகவலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இந்த உண்மையை மறைத்து போலி பாராட்டுகளில் நனைந்து கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

வாடகை கட்டிடங்களுக்கு 18 சதவீத ஜி.எஸ்.டி. வசூலிக்கப்படுவதை எதிர்த்து தி.மு.க. அரசு, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி சொல்லியிருக்கிறார்.

அதிக வரி விதிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீது ஜி.எஸ்.டி. வரியை குறைக்க வேண்டும் என ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டம் நடக்கும் போதெல்லாம் அதில் பங்கேற்கும் தமிழக நிதி அமைச்சர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். வாடகை கட்டிடங்களுக்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி. வசூலிக்கப்படுவதை தி.மு.க. கடுமையாக எதிர்க்கிறது.

மாநிலத்தின் மொத்த உள்நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றவாறு, ஆண்டுதோறும் சொத்துவரி வீதத்தை உயர்த்திட வேண்டும் என 15வது நிதி ஆணையம் நிபந்தனைகளை விதித்துள்ளது.

ஒருவேளை இதை கடைபிடிக்காத பட்சத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2021–26 வரை தமிழகத்துக்கு கொடுக்கப்பட வேண்டிய மத்திய அரசின் மானியம் ரூ.4,36,361 கோடி நிறுத்தி வைக்கப்படும். மத்திய அரசு இப்படி கடுமையான விதிகளை 15வது நிதியாணையத்தின் மூலம் விதித்தபோது அவர்களோடு நட்புறவில் இருந்தவர்தான் எடப்பாடி பழனிசாமி.

தினந்தோறும் குறை

தற்போது, தி.மு.க. அரசுதான் சொத்து வரி உயர்வுக்கு காரணம் என சொல்வது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல உள்ளது.

உள்கட்சி மோதல்களையும், கூட்டணிக்கு கட்சிகளை ஈர்க்க முடியாத இயலாமையையும் மறைப்பதற்காக திராவிட மாடல் அரசை தினந்தோறும் குறை சொல்லிக் கொண்டே இருக்கும் எடப்பாடி பழனிசாமியின் பேச்சை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

kotak Kotak Mahindra Bank

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G– பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. (லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரயில் நிலையம் அருகில்)

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு. பிளன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிளன்பிச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 06.12.2018 அன்று பிளன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இனி "பிளன்பிச்எப்எல்" என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/0617/399938ன் கீழ்: கீழே உள்ள விவரங்களின்படி **திரு. விக்னேஷ்வர் ஜே & திருமதி. ஜெய ஜீவன் நாராயண பிள்ளை** ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 28.11.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.34,82,240/–(ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	03.01.2025
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
நிசர்வ் விலை	**ரூ. 11,00,000/– (ரூபாய் பதினொரு லட்சம் மட்டும்)**
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	**ரூ.1,10,000/– (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)**
Kyc உடன் Emd ஐ சமர்பிப்பதற்கான கடைசி தேதி	02.01.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி)
ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம்	**அட்டவணை** A : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் காலி நிலம். மனை எண்.11 (பழைய கதவு எண்.8/20), வ.உ.சி. நகர் மெயின் ரோடு, சோளம்பேடு, திருமுல்லைவாயல், சென்னை 600062–ல் உள்ள 3431 சதுர அடி நிலம். இந்த சொத்தானது சர்வே எண். 589/3 மற்றும் அதனுடன் தொடர்புடைய டி.எஸ்.எண். 60, பிளாக் எண்.79, வார்டு D, திருமுல்லைவாயல் கிராமம், முன்பு அம்பத்தூர் தாலூக்கா, இப்போது ஆவடி தாலூக்கா, திருவள்ளூர் மாவட்டம், வடசென்னை பதிவு மாவட்டம், அம்பத்தூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஆவடி நகராட்சி எல்லைக்குள் உள்ளது. அதன் எல்லைகள் மற்றும் விஸ்தீரணம் வருமாறு: வடக்கு: 20 அடி சாலை வ.உ.சி. நகர் மெயின் ரோடு, தெற்கு: திரு. கிருஷ்ணகுமாருக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம், கிழக்கு: மனை எண்.12ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம், மேற்கு: மனை எண்.10ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம் .விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 38 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில் : 37 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 90 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில்: 93 அடி மொத்தத்தில் 3431 சதுர அடி. **அட்டவணை** B : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் காலி வீட்டு மனை. பிரிவுபடாத பங்கு நிலம் 225 சதுர அடி மற்றும் அங்குள்ள அனைத்து உரிமைகள் உட்பட இந்த சொத்து மேற்கண்ட அட்டவணை "A"–ன் ஒரு பகுதியாகும். **அட்டவணை** C : பிளாட் எண்.எஸ்2, இரண்டாவது தளம், "திருமலா ஹோம்ஸ்"–ல் உள்ள 550 சதுர அடி (பொதுப் பகுதி உட்பட)
தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை	

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. ஷுபாம் நம்பூரி (மொபைல் எண். +91 9677288418), திரு. விஷால் ஆதிசேஷன்** (+91 9941016600) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR **எண் (+91 9152219751)ஐ** தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங்க் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 30.11.2024 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

homefirst We'll take you home

Home First Finance Company India Limited
CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

இணைப்பு–IV–A [விதி 8 (6)க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்)
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்(கள்) மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் காலம் (ii)ன்படி, ஈடுபெற்ற கடன்தாரரிடம் அடமானம் வைக்கப்பட்ட காலம் (iii)ல் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவை தொகை மற்றும் வட்டியை திரும்ப பெற அவை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது மற்றும் அதேசமயம் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியதன் விளைவாக, மேற்சொன்ன சட்டப்பிரிவு13(2)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்சொன்ன சொத்தை விற்பனை செய்வதன் மூலம் நிலுவையை தொகையை பெறலாம் என திட்டமிட்டுள்ளார். மேலும் இது இங்கு விவரிக்கப்பட்டுள்ளபடி "எங்கே எப்படி எவ்வாறு இருக்கிறது" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு காலம்(i)ல் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன்தாரர்(கள்)/ உடன் கடன்தாரர்களிடமிருந்து திரும்ப பெற "ஆன்லைன்" மூலம் ஏலம் விடப்படும்.

வ. எண்.	கடன்தாரர்(கள்) மற்றும் உடன்கடன்தாரர்கள் பெயர்	சொத்து விவரங்கள்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	டிமாண்ட் நோட்டீஸ் தொகை	சுவாதீனத் தேதி	சந்தை மதிப்பு	இஎம்டி தொகை (ரூ.)	மின்னணு ஏலத்தேதி மற்றும் நேரம்	இஎம்டி மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்	அங்கீகரிக் கப்பட்ட அதிகாரி எண்
1	சத்தீஸ்குமார் என், வித்யாலட்சுமி எஸ்	பிளாட் எண்.41/2 மற்றும் சர்வே எண்.41/3B, அபார்ட்மெண்ட் எண்.335, 3வது தளம், பிளாக் எண்.1, காம்